செ.வெ.எண்: 323

நாள் 03-06-2011

கல்லூரிக் கல்வி இயக்ககம்
சென்னை – 600 006

---

## செய்திக் குறிப்பு

தமிழ்நாடு அரசு மாண்புமிகு உயர்கல்வித் துறை அமைச்சர் திரு. பெ. பழனியப்பன் சென்னையிலுள்ள காயிதே மில்லத் அரசினர் மகளிர் கலைக் கல்லூரியை (02.06.2011 அன்று) ஆய்வு செய்தார். மாணவர் சேர்க்கை பணிகள் நடந்து கொண்டிருந்ததையும், கல்லூரி மற்றும் கல்லூரி விடுதி கட்டிடங்களையும் பார்வையிட்டார். கல்லூரியின் தன்னாட்சி பெற்றுள்ள அக்கல்லூரியின் செயல்பாட்டை கேட்டறிந்தார். கல்லூரி முதல்வர் மற்றும் ஆசிரியர்கள் அக்கல்லூரி மாணவிகளுக்காக புதிய பாட வகுப்புகளை துவக்கவும், கலையரங்கம் கட்டிடவும் கோரிக்கை வைத்தனர். அவற்றை பரிசீலிப்பதாகவும், கலையரங்கம் கட்டிட சட்டமன்ற தொகுதி மேம்பாட்டு நிதியிலிருந்து ஒதுக்கீடு செய்ய ஆவனச் செய்வதாகவும் தெரிவித்தார். பின்னர் நந்தனம் அரசு ஆடவர் கலைக் கல்லூரியிலும் ஆய்வு மேற்கொண்டார். மாண்புமிகு அமைச்சர் அவர்களை கல்லூரி முதல்வர்களும் பேராசிரியர்களும் வரவேற்றனர். ஆய்வின் போது உயர்கல்வித் துறை அரசு முதன்மைச் செயலாளர் டாக்டர் ரா. கண்ணன் மற்றும் கல்லூரிக் கல்வி இயக்குநர் டாக்டர் ரா. உமாராணி அவர்களும் உடனிருந்தனர்.

---

ரா. உமாராணி 3.6.11

கல்லூரிக் கல்வி இயக்குநர்

வெளியீடு, இயக்குநர்,
செய்தி, மக்கள் தொடர்புத் துறை,
சென்னை-9